## முன்னுரை

கற்றுக்கொண்ட பாடங்கள் மன்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) அறிக்கையைக் கவனமாகப் பகுப்பாய்வு செய்து அதைப்பற்றி டிஸம்பர் 16, 2011 அன்று வெளியிட்ட தனது ஆரம்பப் பதிலீட்டை மீள்வலியுறுத்தி அத்துடன்;

இலங்கை சுதந்திரமடைந்தபின்னர் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள்மீது, குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கின் தமிழர்கள் மீது திட்டமிட்ட ரீதியிலே மேற்கொள்ளப்பட்டுவந்த சரீரக, அமைப்புசார்ந்த மற்றும் உளவியல் வன்முறைகளை மீளவும் ஞாபகத்துக் கொண்டுவந்து;

இந்த நாட்டின் அங்கங்களான மக்கள்மீது தண்டனை எதுவுமே வழங்கப்படாமர் தாராளமாயும் குறிப்பானதாயும் மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளையும், இத்தகைய வன்முறைகளை நெறிப்படுத்தி, அனுசரணை வழங்கி அல்லது அதைத் திட்டமிட்டு மேற்கொள்வதில் இலங்கை அரசுக்கு உள்ள பங்கினையும் பற்றி ஆற்றொணாத்ததுயருற்று;

சுய ஆட்சி, மாண்பு மற்றும் முழுமையும் சமத்துவ மகிழ்வும் கொண்ட குடியுரிமை போன்ற தமிழர்களின் மறுக்க இயலாத உரிமைகள் பற்றிய கோரிக்கையானது இப்படியாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த தீர்வுகளற்ற வன்முறைகளால் வலிவூட்டம் பெற்றுள்ளதை வலியுறுத்தி;

பல தசாப்த காலமாகத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை தீர்வற்று நெரித்துவந்த வன்முறைகளால் கதிகலங்கிப்போன தமிழ் வாலிபர்கள் அரசுக்கு எதிராக மேற்கொண்ட வன்முறை எழுச்சிகள் இறுதியிலே பல்வேறு காரணங்களுக்காகக் குடியியல் யுத்தமாக முடிவுற்றமையை மனதிலே வரிந்து கொண்டு;
அவ் எழுச்சிகளின் , டன் புலம்பி;

இந்த நாட்டைப் பீடித்துள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும், நிலைநிற்கத்தக்கதும் நியாயமுமான தீர்வானது தமிழ் பேசும் மக்களின், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த தமிழ்பேசும் மக்களின் மீள்செப்பனிடப்பட்ட திடநம்பிக்கைமீது கட்டப்பெற்றதாய், இலங்கை அரசுடனான அந்த மக்களின் உறவினை மீள்சீர்பொருந்துவதாக அமையவேண்டும் என்பதை வலியுறுத்தி;

இந்த நாட்டின் கூறுகளாக அமையப்பெற்ற அனைத்து மக்களும் சமத்துவ அந்தஸ்தையும், அரசாட்சிக்கான அடைவு வழியையும், சந்தர்ப்பத்தையும், நீதிக்கும் மாண்புக்குமான அடைவு வழியையும் பெற்றடைவதைத் தரிசினமாகக் கொண்ட ஒரு எதிர்காலத்தை நோக்கியவர்களாய்;

2009 இன் இறுதி யுத்தக்கட்டங்களிலே இடம்பெற்ற அரச இராணுவத்தினர், விடுதலைப் புலிகள் மற்றும் குறிப்பாக தமிழ்க் குடிமக்கள் ஆகியோரின் வாழ்வுகளில் ஏற்பட்ட பெரும் இழப்பையிட்டுப் பெரும் துயருற்றவர்களாய்;

குடியியல் யுத்தக் காலத்திலே பிரசன்னமாகியிருந்த பல்வேறு தமிழ் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளால், இந்த நாட்டிற்குள்ளும் அதற்கு வெளியேயும் இருந்த இலங்கையின் குடிமக்களுக்கும் அரசியற் தலைவர்களுக்கும் ஏற்பட்ட துன்பங்கள் மற்றும் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் ஆகியவைகள் பற்றிய கண்டனத்தை வெளியிட்டு;

இலங்கை அரசின் இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கைகளின்போதுவன்னித் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர்கள் குழுவானது இலங்கையின் கணக்கொப்புவிப்பு பற்றி வெளியிட்ட கண்டுபிடிப்புகளை மீள்வலியுறுத்தி;

நிரந்தரமான அரசியற்தீர்வை முன்வைக்கும் அரசின்மீது தமிழ் மக்களின் நம்பிக்கையினை மீள்சீரமைப்பதற்கு, படுமோசமான அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பான கணக்கொப்புவிப்பானது நேர்மையான நல்லிணக்கத்துக்கான செயன்முறைக்கு அவசியமான ஒரு முன்நிபந்தனை என்பதை வலியுறுத்தி;

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்டு, உண்மையை வலியுறுத்துவதை நோக்காகக் கொண்டு நெறிப்படுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நடப்பித்து, அவர்களுக்குப் போதுமான இழப்பீட்டை வழங்குவது நேர்மையான நல்லிணக்கத்துக்கான நடைமுறையாகும் என்பதை வலியுறுத்தி;

யுத்த குற்றங்களாயும் இதர மனித உரிமைகள் மீறல்களாயும் கொள்ளப்படுமளவுக்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மீறியமை தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றிய சகல கணக்கொப்புவிடயங்களையும்பற்றி கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவானது கவனத்திற்கொள்ளும் என இலங்கை அரசானது உலகுக்கு வழங்கிவந்த உறுதியை மீளவும் ஞாபகத்துக்கொண்டுவந்து;

மோசமான சர்வதேச குற்றங்கள் தொடர்பாக அரசுகள் கருத்திற்கொள்ள மறுக்கும் அல்லது கருத்திற்கொள்ள இயலாதிருக்கும் பட்சத்திலே பிரயோகிக்கப்படக்கூடிய குறைநிரப்புக் கொள்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவான தீர்வுகள் ஆகியவைகள் பற்றி அறிந்து தெரிந்துள்ளவர்களாய்;

யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின்போது இடம்பெற்ற துஷ்பிரயோகங்களால் பாதிக்கபட்ட மக்களின் திடநம்பிக்கையை மீளவும் பெற்றிருக்கக்கூடியதான போதியதும் நம்பகத்தன்மை கொண்டதுமான நல்லிணக்கத்தைக் கண்டடையும் அமைப்பியக்கம் ஒன்றை நிறுவுவதற்கு இலங்கை அரசு தவறிவிட்டுள்ளமை பற்றி மனக்கசப்படைந்தவர்களாய்;

கணக்கொப்புவிப்பு தொடர்பானதாக எதுவுமே இல்லாவிட்டாலுங்கூட, எல்.எல்.ஆர்.சீ. அறிக்கையிலே சில நேரிய பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை அங்கீகரித்து, அதன் பரிந்துரைகள் அனைத்தையும் திரட்டினாலுங்கூட, இலங்கையின் கணக்கொப்புவிப்பினை முன்னெடுப்பதிலே அவை குறைவுபட்டவை என்பதைக் குறிப்பிட்டுக்கூறி, அதன் பரிந்துரைகளை அமுல்படுத்தும் உளச்சுத்தியான முன்னெடுப்புகள் அனைத்துக்குமே எவ்வித பாரபட்சமுமின்றி ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்து;

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பானது (TNA) குறிப்பிட்ட காரணங்களின் நிமித்தமாகக் கொண்டுள்ள முடிவு யாதெனில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அறிக்கையானது கணக்கொப்புவிப்பு பற்றிய முக்கிய விடயங்களைக் கவனத்திற்கொள்ளவில்லை; அது மோசமான யுத்த குற்றச்சாட்டுகளுக்கு எதிராக அதனுடன் தொடர்புபட்ட ஆயுதப்படையினர் மற்றும் குடியியற் பணியாளர் ஆகியோரை வேலியடைத்துப் பாதுகாக்கவே உருவாக்கப்பட்டது; கணக்கொப்புவிப்பு விடயம் தொடர்பாகக் கருத்திற் கொள்வதற்கோ அல்லது அதனை அங்கீகரிப்பதற்கோ இலங்கை அரசு விரும்பில்லை என்பது இதிலே புலப்படுகிறது.